மின்னிதழ் E-paper
ஈழநாடு
Eelanadu
22.06.2020 திங்கட்கிழமை

## எல்லா வாக்குச்சாவடிகளிலும் சுகாதாரத்துறை அலுவலர்கள்

கொழும்பு, ஜூன் 22

நாடாளுமன்றத் தேர்தல் பணியின்போது நாட்டின் ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் ஒரு சுகாதார அலுவலர் நியமிக்கப்படுவார் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வாக்குப்பதிவு காலத்தில் சுகாதார அமைச்சு வழங்கிய பாதுகாப்பு வழிகாட்டுதல்களுக்கு இணங்க தேர்தல் அதிகாரிகளை இந்தச் சுகாதார அலுவலர் கண்காணித்து உதவுவார் என்று சுகாதார

02

# 150 படை அதிகாரிகள் வெளிநாடு சென்றால் கைதாகும் அபாயம்!

## ஜஸ்மின் சூகாவால் வந்தது சிக்கல்



கொழும்பு, ஜூன் 22

இலங்கையின் 150இற்கும் மேற்பட்ட பாதுகாப்புப்படை அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் சென்றால், கைது செய்யப்படும் ஆபத்து இருப்பதாகச் சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவம், கடற்படை, பொலிஸ் பயங்கரவாத தடுப்புப் பிரிவு, குற்றவியல் விசாரணைப் பிரிவு, போன்றவற்றைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட அதிகாரிகளுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

02

### முகமாலை துப்பாக்கிச் சூடு

## முழுமையான விசாரணைக்கு வடமாகான ஆளுநர் உத்தரவு



யாழ்ப்பாணம், ஜூன் 22

முகமாலை, காரைக்காடு குளப் பகுதியில் நேற்று முன் தினம் மாலை இளைஞன் ஒருவர் சுட்டுக் கொல்லப்

02

## கெருடாவில் பகுதியை நேற்று சல்லடை போட்ட இராணுவம்



யாழ்ப்பாணம், ஜூன் 22

வடமராட்சி, கெருடாவில், பகுதியில் பொலிசாரும் இராணுவத்தினரும் இணைந்து நேற்று அதிகாலை சுற்றிவளைப்புத் தேடுதல்களை மேற்கொண்டனர்.

கெருடாவில் பிரதேசத்தில் உள்ள சீலாப்புலம் பகுதியிலேயே நேற்று

02

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு சென்றவர்கள் தனிமைப்படுத்தல்



யாழ்ப்பாணம், ஜூன் 22

பருத்தித்துறை- வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் சுகாதார நடைமுறைகளை மீறி அதிக பொதுமக்கள் கூடிய நிலையில்,

02

## கத்தோலிக்க வாக்குகளை திசை திருப்பினார் மல்கம்

### ஹரீன் பகிரங்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 22

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கத்தோலிக்க வாக்குகளை திசை திருப்பினார் என முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ குற்றம் சுமத்தியுள்ளார்.

பொலனறுவை - மெதிரிகிரிய பகுதியில் நடைபெற்ற தேர்தல்

02

## கொரோனா நேற்றும் எவருக்குமே இல்லை!



File Photo

கொழும்பு, ஜூன் 22

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான எவரும் நேற்று அடையாளம் காணப்படவில்லை. இதேவேளை, மேலும் 26 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

02

## கருணாவுக்கு மொட்டில் இடமில்லை!

கொழும்பு, ஜூன் 22

கருணா தமது கட்சியில் போட்டியிடவில்லை என்றும், வேறொரு கட்சியிலேயே போட்டியிடுகிறார்

02



## முரண்பாடான அரசை மக்கள் இம்முறை ஏற்படுத்தமாட்டார்

### வாசுதேவ நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 22

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கொள்கைகளுடன் ஐக்கிய மக்கள் சக்தியினரால் ஒருபோதும் இணைந்து செயற்பட முடியாது. மைத்திரி - ரணில் தலைமையிலான முரண்பாடான

02

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 1,950 | 00 | 467 | 39 | 1,472 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

# ஊரடங்கு நீங்கிய பின் விபத்துகள் அதிகரிப்பு!

வீதி விபத்துகள் மீண்டும் அதிகரித்து வருவதால், அதனைத் தடுக்கும் வகையில் பொதுமக்களுக்கான விழிப்புணர்வுத் திட்டங்களை ஆரம்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைக்கு, அமைச்சர் மஹிந்த அமரவீர குறித்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து, நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் காரணமாக, வீதி விபத்துகள் குறைந்து காணப்பட்டன.

இவ்வருடத்தின் ஜனவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில், வீதி விபத்துகளினால் 736 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வருடத்தில் இதே காலப்பகுதியில் வீதி விபத்துகளினால் 1006 பேர் உயிரிழந்திருந்தனர். இதற்கமைய இவ்வருடத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 270ஆக குறைந்துள்ளது.

## முரண்பாடான...

அரசைப் போல் இம்முறையும் மக்கள் அதுபோன்றதொரு அரசை தோற்றுவிக்கமாட்டார்கள்.”

- இவ்வாறு மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நிகழ்கால அரசியல் நிலைவரம் குறித்து கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

”பொதுத்தேர்தலுக்குப் பின்னர் அரசையும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமாக சிறிகொத்தாவையும் கைப்பற்றுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிடுவது நகைப்புக்குரியது. ஜனாதிபதியுடன் இணக்கமாகச் செயற்பட முடியும் என்று தற்போது இவர்கள் குறிப்பிடுவதன் பின்னணி என்ன என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இரு வேறுபட்ட கொள்கைகளைக் கொண்ட அரசியல் கட்சிகள் இணைந்து அரசை அமைத்து அதனைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பது நல்லாட்சியில் உருவாக்கப்பட்ட தேசிய அரசின் ஊடாகத் தெளிவுபடுத்தப்பட்டது.

காலம்காலமாக இரு வேறுப்பட்ட கொள்கைகளைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை இணைந்து செயற்படக் கூட்டணியமைத்தும் வெற்றி பெறவில்லை. அரசியல் கொள்கையின் அடிப்படையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஒரு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாகத் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் முரண்பாடுகள் முழு நாட்டையும் இல்லாதொழித்தன. ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் இன்றும் பல கேள்விகளை ஏற்படுத்திய வண்ணம் உள்ளது. இன்றும் இவ்விருவரும் ஆணைக்குழுக்கள் எழுப்பும் கேள்விகளுக்கு முரண்பாடான விதத்திலே கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.

ஜனாதிபதியின் கொள்கைகள் ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைக்கு முற்றிலும் முரணானது. இரு தரப்பினரும் ஒருபோதும் ஒன்றிணைந்து அரசியல் ரீதியில் பயணிக்க முடியாது. கடந்த அரசைப் போன்று பலவீனமான அரச நிர்வாகத்தை மக்கள் எதிர்பார்க்கவில்லை. முரண்பாடான அரசை ஒருபோதும் தோற்றுவிக்கமாட்டார்கள்.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான ஆசனங்களைப் பெற்று நிலையான அரசை அமைக்கும். கடந்த காலத் தவறுகளைத் திருத்திக்கொண்டு ஜனாதிபதியின் “சுபீட்சமான எதிர்காலம்“ என்ற கொள்கையை முன்னெடுத்துச் செல்வது பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் எதிர்பார்ப்பு” - என்றார்.

## முழுமையான...

பட்ட சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, அவர் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

முகமாலை காரைக்காடு குளப்பகுதியில் நேற்று மாலை நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உட்பட அதனோடு ஒட்டி நடந்த விடயங்கள் தொடர்பாக அதிக கரிசனை கொண்டிருக்கின்றேன் என்றும்-

இந்தச் சம்பவம் தொடர்பாக முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் பரப்பட்டு வருவதைக் கவனத்தில் கொண்டுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருடன் தாம் கலந்துரையாடினார் என்றும், சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணையை நடத்தி விரிவான அறிக்கையொன்றை தருமாறு அவரிடம் கோரிஇருக்கிறார் என்றும், ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அமைதி சீர்க்குலையக் கூடாது என்பதையும் அவரது கவனத்திற்கு கொண்டு வந்திருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## எல்லா...

அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இந்த செயல்முறைக்கு ஒரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது ஒரு குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஓகஸ்ட் மாதம் பாதுகாப்பான தேர்தலை நடத்த சுகாதார அதிகாரிகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர் என்று மருத்துவர் சமரவீர சுட்டிக்காட்டினார்.

“கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களை அனைத்து தேர்தல் அதிகாரிகளும் பின்பற்றவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ளவர்கள் வாக்களிக்கும் பணியின் தொடக்கத்தில் வாக்குச் சாவடிகளுக்குள் நுழையக்கூடாது. அதற்குப் பதிலாக வாக்குப் பதிவு காலத்தின் கடைசி மணி நேரத்தில் அவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறது.

வாக்குச் சாவடிகளுக்குள் நுழைவதற்கு முன்பும், வாக்குச் சாவடிகளைவிட்டு வெளியேறிய பின்னரும் கை கழுவுதல் மற்றும் பிற சுகாதார நடவடிக்கைகள் பின்பற்றப்படவேண்டும். வாக்குச் சாவடிகளில் பொதுமக்களின் தொடர்புகளை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என்றும் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

வாக்குச் சாவடிகளுக்குள் நுழையும்போது பேனாவை எடுத்துச் செல்லுமாறு வாக்காளர்களிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 150 படை...

போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள இலங்கையின் 150 பாதுகாப்பு அதிகாரிகள் பற்றிய விவரங்களை, ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் அதிகாரியும், உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டத்தின் பணிப்பாளருமான ஜஸ்மின் சூகா பல்வேறு நாடுகளின் விமான நிலையங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஒஸ்ரியா, இத்தாலி உட்பட ஐரோப்பிய நாடுகள் மற்றும் போல்டிக் நாடுகளின் விமான நிலையங்களுக்கு இந்தப் பட்டியலை அவர் அனுப்பி வைத்துள்ளார் என்றும் தெரியவருகின்றது.

இந்தப் பட்டியலில் முன்னாள் இராணுவ அதிகாரிகள் 61 பேரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் வெளிநாடு சென்றால், கைது செய்யப்படும் ஆபத்து இருப்பதாகவும் சிங்கள ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச சட்டத்துக்கு அமைய இவர்களை கைது செய்யுமாறும் ஜஸ்மின் சூகா கோரியிருக்கிறார் என்றும், இந்த அதிகாரிகளுக்கு எதிராக ஜஸ்மின் சூகா, 76 விசாரணை அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ளார் என்றும் அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜஸ்மின் சூகாவின் அறிக்கையில் தமக்கு எதிராக அவதூறு பரப்பப்பட்டுள்ளதாகக் கூறி அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளரான மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே, சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக தனது சட்டத்தரணிகள் மூலம் அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கத்தோலிக்க...

பிரசாரக் கூட்டமொன்றில் வைத்து அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஈஸ்டர் தாக்குதல் பற்றி நான் வெளியிட்ட கருத்துக்கள் என் தந்தையிடம் கேட்டறிந்தவை. அதனை ரணிலே பகிரங்கப்படுத்துமாறு கோரியிருந்தார். நான் தாக்குதல் நடத்தவில்லை.

முன்னாள் ஜனாதிபதி தனக்குத் தாக்குதல் பற்றி தெரியாது என்கிறார். ரணிலின் அறிவுரையின் அடிப்படையில் ஊடகங்களில் கருத்து வெளியிட்டது எனக்குப் பிரச்சினையாக மாறியது.

தகவல்கள் முன்கூட்டியே கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் பின்னணியில் வேறு விளையாட்டு உள்ளது.

நாட்டில் தலைவர் ஒருவர் தெரிவானார், கோட்டாபய 52 வீதம், சஜித் 42 வீதம், கோட்டாபயவின் வாக்குகளில் 5 வீதத்தை எடுத்திருந்தால் இருவரும் சமநிலை வகித்திருப்பார்கள்.

இந்த 5 வீதத்தை மாற்றியது யார், புரிந்து கொள்ள முடிகின்றதா? கத்தோலிக்க வாக்குகள் திசை மாறின. கர்தினால் அரசியல் செய்தார்.

நானும் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவன், கர்தினால் அரசியல் செய்வது வெறுக்கத்தக்கது.

கர்தினாலின் கூற்று அரசியல் ரீதியானது. இவர்களே இந்த 5 வீத வாக்குகள் திசை மாறக் காரணமானவர்கள்-என்றார்.

## கருணாவுக்கு...

என்றும், பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

தேச துரோக நிகழ்ச்சி நிரலை பின்பற்றுபவர்களுடன் சிறிலங்கா பொதுஜன பெரமுன இணைந்து செயற்படாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## கெருடாவில்...

அதிகாலை தொடக்கம், சுமார் 3 மணி நேரம் இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது நீதிமன்றத்தினால், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை இராணுவ முகாம் படையினரும், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸாரும் இணைந்து நடத்திய இந்தத் தேடுதலின் போது, சுமார் 40 வீடுகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

## வல்லிபுர ஆழ்வார்...

ஆலயத்தை முற்றுகையிட்ட பருத்தித்துறை சுகாதார சேவைகள் வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த அதிகாரிகள் குழாம் 14 நாட்கள் கோவிலுக்குள் நுழைய தடை விதித்துள்ளதுடன், சாமி காவிய ஒருவருக்குக் காய்ச்சல் இருந்த நிலையில் அவருடன் சேர்ந்த சாமி காவிய 3 பேரைத் தனிமைப்படுத்தி ஆலயத்திலிருந்து தப்பி ஓடியவர்களைப் பொலிஸாரின் உதவியுடன் தேடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் ஆலயத்துக்குச் சென்ற சுகாதாரப் பிரிவினர் அங்கு சுகாதார நடைமுறைகளை மீறி அதிகளவான மக்கள் கூடுவதைத் தவிர்க்குமாறும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும், முகக் கவசம் அணிவதைக் கட்டாயமாக்குமாறும் கூறியிருக்கின்றனர்.

இதனையடுத்து நேற்று ஆலயத்துக்குச் சென்றபோது அங்கு அதிகளவு மக்கள் கூடியிருந்ததுடன், சுகாதார நடைமுறைகள் எவையும் பின்பற்றாமை அறியப்பட்டுள்ளது.

இதேபோல் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டத்தில் சேவையாற்றும் ஒருவர் கடந்த சில நாட்களாக காய்ச்சல் காரணமாக விடுமுறை அறிவித்திருந்த நிலையில் அவரும் ஆலயத்தில் நின்று சாமி காவியுள்ளார்.

இதனைடுத்து சாமி காவியவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்த நிலையில் 3 பேர் மட்டுமே அங்கு நின்றதுடன் மிகுதி அனைவரும் ஆலயத்திலிருந்து தப்பி ஓடியுள்ளனர். இதனையடுத்து 3 பேரையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், ஆலயத்துக்குள் 14 நாட்களுக்கு பொதுமக்கள் நுழைய தடை விதிக்கப்பட்டு தடை உத்தரவு ஆலயச் சுவரில் ஒட்டப்பட்டதுடன், பூசகர் மற்றும் அவருக்குத் துணை புரிபவர்கள் என 5 பேர் மட்டும் ஆலயத்தில் பூசை நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் காய்சலால் பாதிக்கப்பட்டவருடன் சாமி காவிவிட்டுத் தப்பி ஓடியவர்களை பொலிஸாரின் ஒத்துழைப்புடன் தேடி பிடித்து தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கொரோனா...

தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் நேற்று எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,950 ஆகக் காணப்படுகின்றது. குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,498 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்றுமுன்தினமும் கொரோனாத் தொற்றுடன் எவரும் அடையாளம் காணப்படவில்லை. இறுதியாக கடந்த ஏப்ரல் 16ஆம் திகதியும் (65 நாட்களுக்கு முன்னர்) இவ்வாறு எவரும் அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
22.06.2020 திங்கட்கிழமை

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 492 7805**

# கருணா - வரலாற்றுப் பழியிலிருந்து தப்ப முடியாது

விடுதலைப் புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண தளபதியாக விருந்த, கருணா அம்மான் என்று, அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், அண்மையில் தெரிவித்திருந்த கருத்தொன்று, தென்னிலங்கையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது, தான் கொரோனாவை விட ஆபத்தானவன், ஒரு இரவிலேயே 2000 தொடக்கம் 3000 இராணுவத்தினரை கொன்றிருக்கின்றேன் என்று கருணா தெரிவித்திருந்தார். ‘நுனலும் தன் வாயால் கெடும்’ என்பது போல, கருணா தெரிவித்திருந்த கருத்துக்கள், அவருக்கு எதிராகவே திரும்பியிருக்கின்றது. தான் கூறும் கருத்துக்கள் இந்தளவு கொந்தளிப்பை ஏற்படுத்தும் என்பதை அவர் ஒரு வேளை உணராமல் இருந்திருக்கலாம்.

கருணா ஒரு காலத்தில், கிழக்கு தமிழர்கள் மத்தியில், பெருமையுடன் நோக்கப்பட்டவர். எனினும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து தனியாக செயற்பட்டதன் காரணமாக, அவர் தனது பெயரை ஒரு நாளிலேயே கெடுத்துக்கொண்டார். ஒரு வேளை, அவர் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து செல்லாதிருந்திருந்தால், விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் சிறிலங்கா இராணுவம் இவ்வளவு எளிதான வெற்றியை பெற்றிருக்காதென்றும் ஒரு கருத்துண்டு. ஏனெனில், கருணாவின் கிளர்ச்சியைத் தொடர்ந்து கிழக்கில் விடுதலைப் புலிகளின் போரிடும் திறன் பெருமளவில் வீழ்ச்சியுற்றது. விடுதலைப் புலிகள் அமைப்பு, கிழக்கில் தமது போராளிகளை பெருமளவில் இழந்துபோனது. இதன் காரணமாக சிறிலங்கா இராணுவம் தனது முழு ஆற்றலையும் வன்னியை நோக்கி குவித்தது. விடுதலைப்புலிகளின் போரியல் நடவடிக்கைகள், வடக்கு கிழக்கில் சம வேளையில் பரவலாக இடம்பெற்றிருக்குமானால், விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் 2009இல் முடிவுற்றிருக்காதென்றும் ஒரு பார்வையுண்டு. இவ்வாறான பார்வைகள் தவறானவையல்ல. உண்மையில் கருணாவின் கிளர்ச்சியால் சிறிலங்கா இராணுவத்தின் பணிகள் இலகுவானது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போது, கருணா சிறிலங்கா இராணுவத்திற்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தார். இது அனைவரும் அறிந்த ஒன்று. இதனை தற் போது அட்மிரல் வீரசேகர தெளிவாக குறிப்பிட்டிருக்கின்றார். இறுதி யுத்தத்தின்போது கருணா தங்களுக்கு எவ்வாறு உதவியிருந்தார் என்பதை அவர் பட்டியலிட்டிருக்கின்றார். விடுதலைப் புலிகள் தொடர்பான இரகசிய தகவல்களை கருணா வழங்கியதாலேயே தங்களால் விரைவாக போரை முடிக்க முடிந்ததென்று குறிப்பிட்டிருக்கும், வீரசேகர, போர்க் காலத்தில் அவர் எங்களுக்கு தேவைப்பட்டதால், பயன்படுத்திக் கொண்டோமென்றும் தெரிவித்திருக்கின்றார். கருணாவின் கூற்று தென்னிலங்கையில் சர்ச்சைகளை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து, பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலாள காரிவசம், கருணா தமது கட்சியை சேர்ந்தவரல்ல - தேரத்துரோக செயற்பாடுகளில் ஈடுபவர்கள் எவரும் எமது கட்சியில் இருக்க முடியாதென்று தெரிவித்திருக்கின்றார்.

கருணாவை இனி சிங்களம் கைவிடும். ஏனெனில் கருணா சிங்களத்தின் அடிமடியில் கைவைத்துவிட்டார். ஆனால் கருணாவின் கதை, அனைவருக்கும் ஒரு நல்ல படிப்பினை. அதாவது, சொந்த பலமில்லாமல் சிங்களத்தின் அரவணைப்பில் சீவிக்கலாமென்று எண்ணும் தமிழர்களுக்கு கருணா ஒரு நல்ல உதாரணம். கருணாவை போன்று சிங்கள அரவணைப்பில் நிரந்தரமாக சீவிக்கலாமென்று எண்ணும் சிலர் இப்போதும் தமிழர்கள் மத்தியிலுண்டு. இராணுவத்தினரை கொன்றேன் என்று ஒரு கூற்றை தெரிவித்த மாத்திரத்திலேயே, கருணா கடந்தகாலத்தில் அவர்களுக்கு செய்ததையெல்லாம், அவர்கள் ஒரு நிமிடத்திலேயே மறக்கத் துணிந்துவிட்டனர். அதுதான் சிங்களத்தின் உண்மை முகம். ஒரு வேளை கருணா தனது நிலைமை தொடர்பில் இப்போது உணர முற்பட்டாலும் கூட, காலம் அதிகமாகவே கடந்துவிட்டது. ஒரு மாபெரும் விடுதலைப் போராட்டத்தின் சிதைவிற்கு பங்களித்தவரென்னும் வரலாற்று பழியிலிருந்து கருணா ஒரு போதுமே விடுதலை பெற முடியாது.

# தமிழ் பேசும் இனங்களுக்கு இடையே கட்சிகள் பிரிவினை ஏற்படுத்திவிட்டன

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு



*மட்டக்களப்பு, ஜூன் 22*

*தமிழ் பேசும் இனங்களுக்கிடையில் பிரிவினையை அரசியல் கட்சிகள் ஏற்படுத்தியுள்ளன. இந்த நிலை மாற்றப்படவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.*

*மட்டக்களப்பு கல்லடி றிவோறா விடுதியில் முஸ்லிம் பிரதிநிதிகளுடனான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. அதன்போதே அவர் இதனை வலியுறுத்தினார்.*

*அவர் மேலும் தெரிவித்ததாவது*

*தமிழ் முஸ்லிம் இனங்களுக்கு இடையில் அரசியல் கட்சிகள் பிரிவினையை எற்படுத்தி கட்சி நலன் சார்ந்து இலாபம் ஈட்டிவருகிறார்கள். இது இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தியுள்ளதுடன் சமூகங்களுக்கிடையிலான உறவிலும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது. இது இரண்டு இனங்களையும் முரண்பாட்டை ஏற்படுத்தி இருப்பையே கேள்விக்குள்ளாக்கிவிட்டது.*

*இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி தமிழ் பேசும் இனங்கள் இரண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். தேர்தல் முடிவடைந்ததும் இரு சமூகங்களும் இணைந்து இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்கான செயற்பாட்டை முன்னேடுப்போம் - என்றார்.*

# ஏ.எல். பரீட்சை நடத்தும் திகதியை கல்வி அமைச்சால் குழு நியமனம்

*2020ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையை நடத்தும் திகதியை ஆராய்ந்து அறிவிக்க கல்வி அமைச்சினால் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.*

*இந்தக் குழுவுக்கு தான் தலைமை தாங்குவதாகஜ் கல்வி அமைச்சின் செயலாளர் எச். எம் சித்ரானந்தா தெரிவித்தார்.*

*குழுவின் மற்ற உறுப்பினர்களாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரும் இரண்டு மேலதிக செயலாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*அனைத்துப் பாடசாலை அதிபர்களும் தங்களது கருத்துகளையும் பரிந்துரைகளையும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடக கல்வி அமைச்சுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் என எச்.எம் சித்ரானந்தா குறிப்பிட்டார்.*

*பாடசாலை அதிபர்களின் யோசனைகளைப் பரிசீலித்த பின்னர், இந்த ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை திட்டமிடப்பட்ட திகதிகளில் நடத்தப்படுமா இல்லையா என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.*

*இந்த ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையை செப்ரெம்பர் 7ஆம் திகதி ஆரம்பித்து ஒக்ரோபர் 2ஆம் திகதியுடன் முடிவடையும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# பெரியநீலாவணை கடலில் இராட்சத மீன் மாட்டியது

*அம்பாறை, ஜூன் 22*

*பெரியநீலாவணை கடற்கரையில் கரைவலை மீன்பிடியில் 20 அடி நீளமான இராட்சத மீன் ஒன்று பிடிபட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.*

*அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியநீலாவணை கடற்கரையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பெரியநீலாவணையைச் சேர்ந்த வல்லிபுரம் திருநாவுக்கரசு என்பவருக்குச் சொந்தமான கரை வலையில் 20அடி நீளமான கொடுப்புலி மடையன் சுறா மீன் ஒன்று பிடிக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு பிடிக்கப்பட்ட மீனை மனித பாவனைக்குப் பயன்படுத்துவதில்லை என மீனவர்கள் கூறினர்.*



செய்திகள்

# தமிழ் அரசியல்வாதிகள் விட்ட தவறுதானாம் கிழக்கு செயலணி

## இப்படிச் சொல்கிறார் தவராசா




கொழும்பு, ஜூன் 22

சந்தர்ப்பங்கள் கிடைத்தபோது பயன்படுத்தாது அசமந்தப் போக்காக இருந்துவிட்டு இன்று மாயக்கண்ணீர் வடிப்பதில் அர்த்தம் இல்லை. வடக்கின் தொல்பொருள் மற்றும் புராதன சின்னங்களை காப்பாற்றத் தவறியது வடக்கு மாகாண சபையே என வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் வடக்கிலும் தொல் பொருள் மற்றும் புராதன சின்னங்களை அடையாளம் காண்பதற்கு செயலணி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவினால் கிழக்கு மாகாணத்திலுள்ள மரபுரிமைகளை முகாமைத்துவம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட செயலணியின் உறுப்பினர் ஒருவர் கூறிய கருத்து தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

கிழக்கு மாகாணத்திலுள்ள மரபுரிமைகளை முகாமைத்துவம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட செயலணியின் உறுப்பினர் ஒருவர் வடக்கு மாகாணத்திலும் அவ்வாறு ஒரு செயலணி உருவாக்கப்பட வேண்டும் என கூறியதைத் தொடர்ந்து ஏட்டிக்கு போட்டியாக இன்று பலர் அறிக்கைகள் விட்ட வண்ணம் இருக்கின்றனர்.

ஆனாலும் குறித்த விடயம் தொடர்பாக எமக்கு இருக்கின்ற அதிகாரங்களை நாம் பயன்படுத்த தவறியதன் விளைவே இது என்பதனை அவ்வாறு அறிக்கைவிடும் தமிழ் அரசியல் வாதிகள் உணர்ந்து கொள்வார்களா?.

அத்துடன் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என நாடாளுமன்றத்தினால் உருவாக்கப்பட்ட சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, தொல்பொருள்சார் அமைவிடங்களும் புராதன விடயங்களும்" ஒருங்கிய நிரலுக்குரிய விடயமாக 13 வது திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருங்கிய நிரலிலுள்ள விடயங்களுக்கு மாகாணசபையினால் நியதிச் சட்டங்களை ஏற்படுத்த முடியும். அவ்வாறு நியதிச் சட்டங்கள் ஏற்படுத்தப்படும் போது நாடாளுமன்றத்திற்கு அனுப்பி அதன் அங்கீகாரத்தை பெற்றுத்தான் மாகாணசபை அங்கீகரித்தல் வேண்டும்.

சுற்றுலா விடயங்கள் ஒருங்கிய நிரலுக்குரிய விடயமாக 13 வது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும், எவ்விதத் தடைகளும் இல்லாமல் சுற்றுலா அதிகாரசபை நியதிச்சட்டம் வடக்கு மாகாணசபையால் நாடாளுமன்ற அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்டது. வடமேல் மாகாண சபை அதே வழிமுறையில் சுற்று சூழல் நியதிச்சட்டத்தினை 1990 ஆம் ஆண்டில் உருவாக்கியிருந்தது.

அதேபோன்று தொல்பொருள் சார் விடயத்திற்கும், ஒருங்கிய நிரலில் கூறப்பட்டிருப்பதற்கு அமைவாக நியதிச் சட்டத்தை ஆக்குமாறு பலமுறை மாகாணசபையில் நான் முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தேன்.

எனது கோரிக்கைக்கு முதலமைச்சரோ அல்லது கூட்டமைப்பை பெரும்பான்மையாக கொண்ட மாகாணசபை உறுப்பினர்களோ அன்று முக்கியத்துவம் கொடுத்திருக்கவில்லை.

அவ்வாறு நியதி சட்டத்தை உருவாக்கியிருந்தால் அந்த நியதி சட்டத்தின் கீழ் மத்திய அரசினால் பிரகடனப்படுத்தப்படாத தொல்பொருள்சார் அமைவிடங்களையும் புராதன இடங்களையும் மாகாணசபையின் கீழ் பிரகடனப்படுத்தி அதன் பொறுப்பின் கீழ் கொண்டு வந்திருக்கலாம்.

அந்தவகையில் சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதனை பாவிக்காது காலத்தினை கழித்துவிட்டு இன்று மாயகண்ணீர் வடிப்பதில் அர்த்தம் இல்லை -என்றார்.

# விசேட சுற்றிவளைப்பில் 25,912 பேர் மாட்டினார்கள்

## 66 துப்பாக்கிகள் பறிமுதல்

கொழும்பு, ஜூன் 22

நாடளாவிய ரீதியில் கடந்த இரு வாரங்களாகப் பொலிஸார் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கைகளின்போது பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் 25 ஆயிரத்து 912 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 6 ஆம் திகதி காலை 6 மணிமுதல் நேற்று முன் தினம் சனிக்கிழமை நள்ளிரவு 12 மணி வரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்தச் சந்தேகநபர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளதாவது: -

இந்தச் சுற்றிவளைப்புக்களின்போது போதைப்பொருளுடன் 6 ஆயிரத்து 420 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுள் 3 ஆயிரத்து 551 பேரிடமிருந்து 5 கிலோ 472 கிராம் 941 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, 2 ஆயிரத்து 609 பேர் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 217 கிலோ 474 கிராம் 883 மில்லிகிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே ஐஸ் போதைப்பொருளுடனும் 260 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 758 கிராம் 936 மில்லி கிராம் ஐஸ் மீட்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபானத்துடன் 5574 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 782 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருந்த 52 பேரும், வெடிமருந்துகளை வைத்திருந்த அறுவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது 18 குழல் 12 ரகத் துப்பாக்கிகள், 24 கல்கட்டஸ் ரக துப்பாக்கிகள், 18 ரிபிடர் ரக துப்பாக்கிகள், 5 புதிய வகை துப்பாக்கிகள், 36 தன்னியக்கத் தோட்டாக்கள், மூன்று வாள்கள், கத்தி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. 367 கிராம் வெடி மருந்து, 23 டெட்டனேட்டர்கள் மற்றும் 7 கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இவை மாத்திரமின்றி பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 5 ஆயிரத்து 110 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்கூறிய குற்றச் செயல்களுக்குள் உள்ளடங்காத வேறுவகையான குற்றச்செயல்களை புரிந்தமை தொடர்பில் 8 ஆயிரத்து 750 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# வவுனியாவில் தேசப்பிரிய தலைமையில் கூட்டம்!



வவுனியா, ஜூன் 22

தேர்தல் ஒழுங்குமுறைகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பான கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தல் ஒழுங்குமுறைகள் மற்றும் முறைப்பாடுகள், அதற்கான நடவடிக்கை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் தேர்தல் ஆணையக உறுப்பினர்கள், வடக்கு கிழக்கைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர்கள், தேர்தல் அலுவலகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

விளையாட்டுச் செய்திகள்

# பென்ஜிமா அபார ஆட்டம் ரியல் மட்ரிட் இலகு வெற்றி



ரியல் மட்ரிட் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வலென்சியா அணியை இலகுவாக வெற்றி கொண்டது.

ஸ்பெயினில் நடந்து வரும் கழக அணிகளுக்கான லா லிகா கால்பந்து தொடரில், மட்ரிட்டில் அரங்கேறிய லீக் ஆட்டம் ஒன்றில் முன்னாள் சம்பியனான ரியல் மட்ரிட், வலென்சியா அணிகள் மோதின.

ரியல் மட்ரிட் சார்பில் கரிம் பென்ஜிமா 61 ஆவது மற்றும் 86 ஆவது நிமிடத்திலும், காயம் காரணமாக 10 மாத இடைவெளிக்கு பிறகு களம் திரும்பிய மார்டோ அசென்சியோ 74 ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர்.

இந்த போட்டியில் 2 கோல் அடித்ததன் மூலம் பென்ஜிமா (மொத்தம் 243 கோல்கள்) ஒட்டுமொத்தத்தில் ரியல் மட்ரிட் அணிக்காக அதிக கோல் அடித்தவர்களின் பட்டியலில் 5 ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

இதுவரை 29 ஆட்டத்தில் ஆடியுள்ள ரியல் மட்ரிட் அணி 18 வெற்றி, 8 சமன், 3 தோல்வியுடன் 62 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்தில் நீடிக்கிறது. நடப்பு சம்பியனான பார்ஸிலோனா அணி 64 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறது.

# பார்ஸிலோனாவுக்கு ஏமாற்றம்!



லா லிகா உதைபந்தாட்ட போட்டி ஸ்பெயினில் நடந்து வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த ஒரு லீக் ஆட்டத்தில் நடப்பு சம்பியனான பார்ஸிலோனா அணி, செவில்லா அணியை எதிர்கொண்டது.

பந்தை கட்டுப்பாட்டில் (64 சதவீதம்) வைத்திருப்பதிலும், ஷொட்கள் அடிப்பதிலும் பார்ஸலோனா அணி கணிசமாக ஆதிக்கம் செலுத்திய போதிலும் எதிரணியின் தடுப்பு அரணை கடைசி நிமிடம் வரை உடைக்க முடியாமல் ஏமாற்றத்திற்கு உள்ளானது.

பார்ஸிலோனா நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்ஸி 'பிரிகிக்' வாய்ப்பில் அடித்த ஒரு ஷொட் கம்பத்திற்கு மேலாக பறந்தது. இதே போல் லுகாஸ் ஒகாம்போஸ் அடித்த பந்தும் கம்பத்தில் பட்டு வாய்ப்பு நழுவியது. இதனால் இந்த ஆட்டம் கோல் இன்றி (0-0) சமநிலையில் முடிந்தது. முன்னதாக முதல் பாதி ஆட்டம் நிறைவடையும் சமயத்தில் இரு அணி வீரர்களும் ஒருவருக்கொருவர் ஜேர்சியை பிடித்து இழுத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

பார்ஸிலோனா இதுவரை 30 ஆட்டங்களில் விளையாடி 20 வெற்றி, 5 சமன் 5 தோல்வி என்று 65 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. 29 ஆட்டங்களில் விளையாடி 62 புள்ளிகளுடன் உள்ள ரியல்மட்ரிட் அணி அடுத்த லீக்கில் வெற்றி பெற்றால் பார்ஸிலோனாவை சமன் செய்யும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

# ரசிகர்களுடனே உலகக்கிண்ணம்!

ருவென்ரி - 20 உலகக்கிண்ணம் அவுஸ்திரேலியாவில் எதிர்வரும் ஒக்ரோபர் 18 ஆம் திகதி முதல் நவம்பர் 15 ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கொரோனா அச்சுறுத்தலால் இந்தத் தொடர் நடக்குமா என்பது சந்தேகமே.

எனினும் இது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

இதனிடையே, உலகக் கிண்ணப் போட்டியை நடத்துவது நடைமுறை சாத்தியமில்லை என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்தது. இந்த நிலையில் உலகக் கிண்ணம் நடத்தப்பட்டால் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாக அதிகாரி நிக் ஹாக்ளே தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியதாவது: -

உலகக்கிண்ணத் தொடரில் விளையாட 15 நாட்டு வீரர்களை அவுஸ்திரேலியாவுக்கு நுழைய அனுமதிக்கப்பட்டால் ரசிகர்களையும் தடுத்து நிறுத்த மாட்டோம். போட்டியை பார்க்க அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும். ரசிகர்கள் இல்லாமல் உலகக் கிண்ணம் இல்லை.

கொரோனா தொற்று உலகளவில் இருப்பதால் 15 அணிகளையும் வரவழைப்பது என்பது எங்களுக்கு மிகப்பெரிய சவாலாகும் - என்று கூறினார்.

# 5 மாதங்களின் பின்னர் சந்திக்கும் தம்பதியர்



ஹைதராபாத், ஜூன் 22

உலகளாவிய கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பிரிந்திருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வீரர் சொஹைப் மலிக் மற்றும் இந்தியாவின் பிரபல ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா ஆகிய இருவரும் 5 மாதங்களின் பின்னர் சந்திக்கவுள்ளனர்.

இந்தியாவின் முன்னணி டென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்ஸா 2010 ஆம் ஆண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொஹைப் மலிக்கை திருமணம் செய்தார். இவர்களுக்கு இஷான் என்ற மகன் உள்ளார்.

கொரோனா ஊரடங்கு இந்தியாவில் பிறப்பிக்கப்பட்டபோது மலிக் பாகிஸ்தானில் உள்ள சியால்கோட்டில் இருந்தார். அவரது மனைவி சானியாவும், குழந்தையும் ஹைதராபாத்தில் உள்ளனர். விசா அனுமதியின்மை, விமானப் போக்குவரத்து இல்லாததால் கடந்த 5 மாதங்களாக மனைவியையும் குழந்தையையும் பார்க்க முடியாமல் மலிக் தவித்தார்.

இந்த நிலையில் 5 மாதங்களுக்குப் பிறகு குடும்பத்தினரை சந்திப்பதற்காக சோயிப் மாலிக் இந்தியா செல்கிறார். பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் இதற்கான அனுமதியை அவர் பெற்றுள்ளார்.

29 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி டெஸ்ட் மற்றும் 20 ஓவர் போட்டிகளில் விளையாடுவதற்காக வருகிற 28 ஆம் திகதி இங்கிலாந்து புறப்பட்டு செல்கிறது. மலிக் மட்டும் இந்தியா சென்று விட்டு அங்கிருந்து ஜூலை 24 ஆம் திகதி இங்கிலாந்து சென்று அணியுடன் இணைந்து கொள்வார்.

# பங்களாதேஷ் வீரர்களுக்கு கொரோனா நோய் தொற்று



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் மோட்ரஷா உட்பட இரு வீரர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல் வங்காளதேச ஒருநாள் கிரிக்கெட் அணியின் கப்டன் தமிம் இக்பாலின் அண்ணனும், முன்னாள் வீரருமான நபீஸ் இக்பாலும் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளார்.

தற்போது தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் மோட்ரஷா நல்ல உடல்நிலையுடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் பங்களாதேஷ் அணியை வழிநடத்திய 36 வயதான மோட்ரஷா 36 டெஸ்ட், 220 ஒருநாள் மற்றும் 54 ருவென்ரி - 20 போட்டிகளில் விளையாடி உள்ளார். அத்துடன் அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருக்கிறார்.

"நான் சீக்கிரம் குணமடைய வேண்டி ஒவ்வொருவரும் எனக்காக பிரார்த்திக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். எல்லோரும் மிகவும் கவனமுடன் இருங்கள். வீட்டிலேயே பாதுகாப்புடன் இருங்கள். தேவையில்லாமல் வெளியே செல்லாதீர்" என்று மோட்ரஷா தனது முகநூல் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

செய்திகள்

# நயினாதீவு அம்மன் ஆலயத்தில் காலணியுடன் பொலிஸ், படைகள்

## மத உணர்வை அவமதிக்கக்கும் செயலென விசனம்



யாழ்ப்பாணம், ஜூன் 22

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் பொலிஸ், கடற்படையினர் காலணியுடன் நடமாடுகின்றனர். இது ஆலயத்தின் புனிதத் தன்மையை மீறுவதாகவும், தமது மத உணர்வுகளை அவமதிப்பதாகவும் இந்துக்கள் குற்றஞ்சாட்டினர்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசனி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஆலயத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே உள்ளே செல்ல அனுமதியளிக்கப்பட்டது. ஆலய வளாகத்தின் வெளியே பெருமளவு பக்தர்கள் சூழ்ந்திருந்தபோதும் எவருக்கும் உள்ளே செல்ல அனுமதி அளிக்கப்படவில்லை. இந்நிலையில் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட பொலிஸாரும் கடற்படையினரும் காலணிகளுடனே நடமாடினர்.

இதுதொடர்பில் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டபோதும், அவர்கள் அதை மதிக்காமல் தொடர்ந்தும் காலணிகளுடனேயே நடமாடினர்.

இது தொடர்பான படங்கள் தற்போது அவை தொடர்பிலான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன. பொலிஸ், கடற்படையின் இந்த நடவடிக்கையை கடுமையாக பலரும் எதிர்த்து வருகின்றனர்.

இது தொடர்பில் ஆலய பரிபாலன சபை , இந்து அமைப்புக்கள்,சர்வ மத அமைப்புக்கள் கவனத்தில் கொண்டு எதிர்வரும் நாட்களில் ஆலய சூழலில் காலணிகளுடன் பணியில் ஈடுபடாது தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலரும் கோரி வருகின்றனர்.

## வாக்களிப்பு நேரத்தை அதிகரிப்பதா? வியாழனன்றே முடிவு எடுக்கப்படும்

கொழும்பு, ஜூன் 22

நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இம்முறை வாக்களிப்பு நேரத்தை அதிகரிப்பதா என்பது குறித்த முடிவு எதிர்வரும் 25 ஆம் திகதி எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளின் அடிப்படையிலேயே நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது. அதற்கான ஒத்திகை வாக்களிப்பு நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் வழக்கமான நேரத்தைவிட மேலதிக நேரத்தை இம்முறை வாக்களிப்பிற்காக வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான முடிவு 25 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்றும் ஆணைக்குழுத் தலைவர் குறிப்பிட்டார்.

## கடலில் நீராடிய குடும்பத்தில் நால்வர் நீரில் மூழ்கிச் சாவு

கொழும்பு, ஜூன் 22

கடலில் நீராடிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பெண்கள் மற்றும் சிறுவன் உள்ளிட்ட நால்வர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, வத்தளை திக்கோவிட்ட கடற் பரப்பில் நேற்று முன்தினம் மாலை ஒரே குடும்பத்தைச் சேர்நத 5 பேர் நீராடினர். இதன்போது அவர்கள் அலையில் சிக்கி மூழ்கிக் காணாமல் போயினர்.

இது குறித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அப்பகுதி வாசிகளின் உதவியுடன் நடத்தப்பட்ட தேடுதலில், மூழ்கியவர்களில் ஒரு சிறுவன், 4 பெண்கள் உட்பட ஐவர் மீட்கப்பட்டனர்.

எனினும், சிகிச்சை பலனின்றி சிறுவனும் 3 பெண்களும் உயிரிழந்தனர். இவர்களில் 14 வயது சிறுவனும், 16 வயது சிறுமியும், 20 மற்றும் 30 வயதுடைய இரு பெண்களும் உள்ளடங்குவர்.

மற்றைய பெண் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## மன்னாரில் பிள்ளையார் ஆலயம் மீண்டும் மர்மநபர்களால் உடைப்பு



மன்னார், ஜூன் 22

மன்னார் - தள்ளாடியில் அமைந்துள்ள சிறு பிள்ளையார் கோவில் விக்கிரகம் நேற்று அதிகாலை இனந்தெரியாதவர்களால் சேதமாக்கப்பட்டது.

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் தள்ளாடி விமான ஓடுபாதை அருகில் இருந்த சிறு ஆலயமே இவ்வாறு சேதமாக்கப்பட்டது.

ஆலயத்தின் மூலவரான பிள்ளையார் விக்கிரகம் தாக்கப்பட்டு தும்பிக்கையில் சிறு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் ஆலயத்தில் இருந்த இந்துக் கடவுளர்களின் படங்கள், ஆலயத்தின் வாசல் பகுதியில் உடைக்கப்பட்டன. அத்துடன், சில படங்கள் அருகில் உள்ள பற்றைகாடுகளுக்குள் வீசப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

அதேநேரத்தில் இந்தச் சிறு ஆலயத்தின் வெளிப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலை குப்பைகள் மற்றும் மரத்துண்டுகளினால் மூடப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கோவில், தொடர்சியாக இனம் தெரியாத நபர்கள் உடைத்தும் - சேதப்படுத்தியும் வருகின்றனர். இது தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 88, 842 பேர் மன்னாரில் வாக்களிக்கத் தகுதி

மன்னார், ஜூன் 22

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் 88 ஆயிரத்து 842 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்று மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர். ஜே.ஜெனிற்றன் தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ளது. மன்னார் மாவட்டத்தில் தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தில் பொதுத்தேர்தலை ஜனநாயக ரீதியிலும் சுகாதார முறைப்படியும் நடாத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இம் முறை மன்னார் மாவட்டத்தில் 88 ஆயிரத்து 842 வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பிற்கு 4 ஆயிரத்து 259 விண்ணப்பங்கள் இது வரை பெறப்பட்டுள்ளன.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் 6 ஆசனத்தை பெற்றுக் கொள்ள 17 கட்சிகளும், 28 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. இவற்றில்405 வேட்பாளர்கள் போட்டியிடுகிறனர் - என்றார்.

## கழிவுகளை கொட்டியவரைப் பிடித்த சுகாதார பரிசோதகர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். நகரில் பொது இடத்தில் குப்பைகளைக் கொட்டியவரைப் பிடித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ஸ்ரான்லி வீதிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேரக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் குப்பை அதிகளவில் கொட்டப்படுவதால் அதற்கு அண்மித்த இடங்களில் உள்ளவர்கள் பல்வேறு சுகாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருந்தனர். இந்நிலையில் அவ்விடத்தில் குப்பை போட வேண்டாம் என்று யாழ்.மாநகர சபை எச்சரித்தது. ஆனால், அதையும் மீறி இப்பகுதியில் குப்பைகள் கொட்டப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## போதைத் தடுப்பு பொலிஸாரால் 24 மணி நேரத்தில் 381 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 22

24 மணி நேரத்தில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போது போதைப்பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் 381 பேர் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 6 மணி தொடக்கம் நேற்றுக் காலை 5 மணி வரையான 24 மணி நேரத்தில் மேல் மாகாணத்தில் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.


இதன்போது ஹெரோயினுடன் 133 பேர், கஞ்சாவுடன் 92 பேர், ஐஸ் போதைப் பொருளுடன் 121 பேர் மற்றும் கோடா உடன் 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பாகம் – 22

தயாளன்

# கூட்டமைப்பின் உருவாக்கம் எப்படி நிகழ்ந்தது?


பரமதேவா

பனாகொடை முதலானோர் உன்னிச்சைக்குச் சென்றனர். சின்னவன் வரதராஜப் பெருமாளை படுவான்கரையிலிருந்து கூட்டிச் சென்றார். தம்பலகாமத்தைச் சேர்ந்த இவரே பின்னாளில் ஈ. பி. ஆர். எல். எவ். மேற்கொண்ட கிண்ணியா வங்கிக் கொள்ளையின் சூத்திரதாரி. காரைநகர் கடற்படைத் தளம் மீதான தாக்குதலில் இவர் உயிரிழந்தார். இத் தாக்குதலில் சோபா என்ற தோழியும் உயிரிழந்தார். ஆயுதப்போராட்ட வரலாற்றில் முதல் உயிரிழந்த தமிழ்ப் பெண் இவராவர்.

தமது தரப்பினரைக் கொண்டுவரும் பொறுப்பைச் சந்தோசம்,பசீர் ஆகியோரிடம் ஒப்படைத்திருந்தார் பிரபாகரன். திருமலைக்குச் சென்ற சந்தோசம் அப்போது ஆதரவாளராக இருந்த மனோ மாஸ்டரையும் அழைத்துக்கொண்டு சென்றார். டாக்டர் ஜெயகுலராஜாவைத் தவிர ஏனையோரைத் திருமலை வழியா கச் சந்தோசம் அழைத்துச் சென்றார்.

டாக்டரை பசீர் மட்டு. சிறைக்கு அண்மையிலுள்ள டானியலின் இல்லத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து மன்னார் வழியாகப் பரப்புக்கடந்தானில் உள்ள தமது இல்லத்துக்குப் போகவேண்டும். மட்டு. நகரிலிருந்து பேருந்தில் பயணமாவதானால் யாருடைய கண்ணிலாவது சிக்க நேரிடும். எனவே சித்தாண்டிக்குச் சென்று அங்கு இரவு தங்கி விட்டு காலையில் அங்கிருந்து புறப்படுவது பாதுகாப்பாக இருக்கும் எனக் கருதினார்.

அங்கே கிழக்கின் முதற் போராளி யோகனின் (பாலிப்போடி சின்னத்துரை) வீடு உள்ளது. அங்கே இவர்கள் சென்ற சிறிது நேரத்தில் கவிஞர் காசியானந்தனும்குடும்பத்துடன் வந்து சேர்ந்தார். தலைமன்னாரில் இருந்து கப்பல் மூலம் பயணமாவது அவரது திட்டம்.

இரு பகுதியினரதும் 'ஐடியா'வும் ஒரே மாதிரி அமைந்ததுதான் சிக்கல். காசி அண்ணா பிரபலமானவர். அவர் போகும் வண்டியைச் சோதனை செய்ய முயன்றால் இவர்களுக்கும் சிக்கல் வந்துவிடும். எனவே நிச்சயமாக அவர் போகும் பேருந்தில் பயணிக்கக்கூடாது என பசீர், யோகன், டாக்டர் என மூவரும் தீர்மானித்தனர். எனவே வவுனியாவுக்கான பேருந்தில் போக முடிவெடுத்தனர். யோகன் தனது தாயாரையும் இவர்களையும் அடுத்த நாள் காலை ஒரு மோட்டார் வண்டியில் ஏற்றிக்கொண்டு வாழைச்சேனை வரை போய் அங்கிருந்து வவுனியாவுக்கு வழியனுப்பி வைத்தார்.

மறு நாள் பரப்புக்கடந்தானில் இருந்து கல்லேற்றும் லொறி, இ.போ.ச. பஸ், படகு என்பனவற்றில் பயணித்து கேரதீவு வழியாக யாழ்ப்பாணத்துக்கு டாக்டரைக் கூட்டிச் சென்றார் பசீர்.

எல்லாம் முடிந்துவிட்டது. இந்தச் சாதனைகளுக்குச் சொந்தக்காரர் தாமே என புளொட் அறிவித்தது. இல்லை இல்லை நாங்கள் தான் என்றது ஈ.பி. ஆர்.எல்.எவ். அடுத்துப் பனாகொடை மகேஸ்வரனின் தமிழீழ இராணுவம் தாங்களே இந்தச் சாதனையாளர்கள் என்றது. மூன்று பகுதியினரும் பரமதேவாவுக்கு நன்றி தெரிவித்தனர். எல்லா அறிக்கைகளும், உரிமை கோரல்களும், பேட்டிகளும் இந்திய, இலங்கைப் பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்குப் பரபரப்பான தீனியாகின.

தமிழகத்தில் பேட்டியளித்த டக்ளஸ் தான் துண்டுப் பிரசுரம் வழங்குகையிலேயே கைதானார் எனத் தெரிவித்தார். எல்லாவற்றையும் வாசித்த பரமதேவா புன்முறுவலுடன் அதைக் கடந்தார். தமிழகத்தில் மட்டு. சிறையின் பாரிய வரைபடத்தை வைத்து தாங்கள் எவ்வாறு அரசியல் கைதிகளை மீட்டோம் என்று கண்காட்சியொன்றை ஏற்பாடு செய்து விளக்கிக்கொண்டிருந்தனர் ஈ. பி. ஆர். எல்.எவ்வினர். பரமதேவா அங்கு சென்றார். தன்னைக் கண்டதும் அந்தச் சிறையிலிருந்து மீண்டு வந்த ஈ.பி.ஆர். எல்.எவ் பிரமுகர் ஒருவர் " நாங்கள் நிதி சேகரிப்புக்காகத்தான் இதனைச் செய்கிறோம். தயவு செய்து இங்கு விளக்கமளிப்பவர்களிடம் கேள்வி எதுவும் கேட்டு விடாதீர்கள் " என்று தனது கையைப் பிடித்துக் கெஞ்சினார் என்று பரமதேவா புலிகள் இயக்கத்தவர் ஒருவரிடம் குறிப்பிட்டார். அவரது வேண்டுகோளுக்கு மதிப்பளித்து அங்கிருந்து திரும்பி வந்துவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்

சித்தா, தம்பிராஜா, தவம் (நாசர்) மாணிக்கப்போடி கணபதிப்பிள்ளை (லூக்காஸ்), பாலிப்போடி செல்வநாயகம் (செல்வம் - யதுகுலன்) ஆகியோர் தமிழீழ இராணுவத்தில் சேர்ந்தனர்.இதே இயக்கம் கோடிக்கணக்கான பணம், நகைகளைக் காத்தான்குடி மக்கள் வங்கியைக் கொள்ளையிட்டதன் மூலம் பெற்றுக்கொண்டது. இதில் வரதனின் பங்களிப்பு மிகப்பாரியது. தம்மைக் காட்டிக் கொடுத்ததாக இந்த இயக்கம் ஆரையம்பதியைச் சேர்ந்த கோணாமலை என்பவரைச் சுட்டுக்கொன்றது. மற்றொருவர் இறந்தவர்போல் நடித்து உயிர் தப்பினார். ஒருசில தாக்குதல்களை இந்த இயக்கம் மேற்கொண்டது. யாழ்ப்பாணத்தில் 'சுவிப்' ரிக்கெற் விற்பனையில் ஈடுபட்டது. ஒபரோய் தேவனால் ஆரம்பிக்கப்பட்டதமிழீழ விடுதலை இராணுவத்தைத் தான் தடை செய்வதாக அறிவித்தது.

பின்னர் சித்தா, தம்பிராஜா முதலானோர் தமிழீழ இராணுவத்தில் இருந்து விலகி புலிகளில் இணைந்து கொண்டனர். இவர்களில் மாணிக்கப்போடி கணபதிப்பிள்ளை (லூக்காஸ்) என்பவர் புளொட் மோகனால் சுட்டுக்கொல்லப்பட்டார். பாலிப்போடி செல்வநாயகம் (செல்வம் - யதுகுலன்) ஈ. பி.ஆர். எல். எவ்வினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துன்னாலை - கரவெட்டியைச் சேர்ந்த ஜெயா, மனோ, ஆகியோர் புலம் பெயர் நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். வரதன் கைதாகிச் சிறையில் அடைக்கப்பட்டார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின் விடுதலையானார். வரதன் 1990 இல் புலிகளுடன் இணைந்து நடவடிக்கைகளுக்காகக் கொழும்பு சென்றார். ஏற்கெனவே இவர் சிறையில் இருந்த போது பல தரப்பினரதும் தொடர்புகள் இவருக்குக் கிடைத்தது. அவற்றைச் சரியாகவே பயன்படுத்தினார். சிவராமை ஏதோ ஒருவகையில் புலிகளுடன் தொடர்புபடுத்தியதில் இவருக்கும் பங்குண்டு. கொழும்பில் அரசை அதிர வைக்கும் தாக்குதலொன்றை மேற்கொண்டார்.

இவரது மறைவின் பின் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன், காதர் முதலானோர் கைதாக நேர்ந்தது . 1983 இல் பண்டிதரின் தொடர்பு மூலமாகக் காதர் இந்தியா வுக்கு சென்று புலிகளைச் சந்தித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

பரந்தன் ராஜன் புளொட்டிலிருந்து விலகி உதிரிகளானோரால் உருவாக்கப்பட்ட ஈ.என்.டி.எல். எவ்வின் தலைவரானார். சிறைக்காவலர் கிருஷ்ணமூர்த்தியும் புளொட்டில் இணைந்து பின்னர் ஈ என்.டி.எல்.எவ் என்று போனார் .

சித்தா குச்சவெளி, ஏறாவூர் பொலிஸ் நிலையங்கள் உட்பட சில தாக்குதல்களில் தனது ஆற்றலை வெளிப்படுத்தினார். இந்திய இராணுவ காலத்தில் மட் / அம்பாறை அரசியல்துறை பொறுப்பையும் சிறிது காலம் வகித்தார்.

தனது மனதில் பரமதேவாவுக்கு உயரிய இடம் வழங்கிய பிரபாகரன் பரமதேவா புலிகளில் இணைந்து கொண்டார். அவருடன் கைதாகி ஏற்கெனவே விடுதலையாகியிருந்த பொத்துவிலைச் சேர்ந்த ரஞ்சனும் (சைமன் )புலிகளுடன் இணைந்து கொண்டார் இவர் 13 -02 -1985 கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலில் உயிரிழந்தார். இவர் பொத்துவில் எம்.பி. கனகரத்தினத்தின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

பரமதேவாவுக்கு தனிச் சிறப்பு உண்டு.தனது இயக்கத்தில் சேர்ந்தவர்களில் இவருக்கு மட்டுமே தனி இயக்கம் நடத்த அனுமதி வழங்கினார் பிரபாகரன். வேறு எவருக்கும் இந்த அனுமதி கிடைக்கவில்லை. எனினும் பரமதேவா இதனை ஏற்கவில்லை "எனக்கு நீங்கள் தான் சரியான தலைவராகத் தெரிகிறீர்கள். உங்கள் தலைமையின் கீழ் போராடுவது எனக்குப் பெருமைதான். அத்துடன் எனக்கும் உங்களுக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வு உண்டு. அது எதிர்காலத்தில் என்னுடன் இணைபவர்களுக்கு இருக்குமோ தெரியாது. வீணான இரத்தக் களரி ஏன்?" என்று சொல்லி மறுத்து விட்டார்.

22 -09 - 1984 இல் களுவாஞ்சிக்குடித் பொலிஸ் நிலையத் தாக்குதலில் உயிரிழந்தார். உயிரிழக்கும் தருணத்திலும் "அம்மாவிடம் போய்ச் சொல்லுங்கள் - நான் களத்தில்தான் இறந்தேன் என்று. அண்ணன் புளொட்டில் இருப்பதால் நாளைக்கு வேறு மாதிரிக் கதைகள் வரலாம்", எனக் கூறினார். போராட்டத்தின் மேலும் இயக்கத்தின் மீதும் அவருக்கு இருந்த பற்றைக் கண்டு அவரைத் தூக்கச் சென்றவர் வியந்து நின்றார்.

பயிற்சி முடிந்து வந்த போராளிகளை அவர்களது பெற்றோரைச் சந்திக்க வீட்டுக்கு அனுப்பிவைப்பது வழக்கம். பரமதேவாவைப் பொறுத்தவரை ஏற்கனவே பிரபலமானவர். இதனைவிட இவரது தாயார் கல்லடி பிரதான முகாமுக்கு அண்மையிலேயே வசித்து வந்தார். அந்த வீடு அவரது சகோதரிக்குச் சொந்தமானது. அந்த வீட்டில் தாயாரைச் சந்திப்பது பல சிக்கல்களை உருவாக்கலாம். எனவே அமிர்தகழியிலோ அல்லது வேறு இடத்துக்கோ அம்மாவை வரவழைத்துச் சந்திக்கலாமே என இவரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு அவர் அளித்த பதில் " நான் போராட்ட வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்த பின் எனது அம்மா என்னைக் கைதியாகவே பார்த்துள்ளார் . இதுவரை என்னை ஒரு வீரனாகப் பார்க்க முடியவில்லை. மட்டக்களப்பில் மேற்கொள்ளும் ஒரு தாக்குதலில் நான் பங்குபற்றி அதில் கைப்பற்றப்பட்ட ஆயுதமொன்றை ஏந்தியவனாகவே அம்மாவைச் சந்திக்க விரும்புகிறேன்".


கருணா

இவ்வாறான கனவுகளுடன் இருந்தவரின் மறைவு தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும் பாதிப்பாக அமைந்து விட்டது .

கிழக்குக்கான தலைமை அங்கிருந்தே உருவாக வேண்டும் என்பது பிரபாகரனின் எதிர்பார்ப்பு. அதற்கேற்ற வகையில் பொருத்தமானவராகப் பரமதேவா திகழ்ந்தார். அவருக்குச் சமர்க்களத்தில் ஓரிரு அனுபவம் கிடைத்தால் போதும். மிகுதியை அவரே பார்த்துக்கொள்வார். நிர்வாகத்திறன், இலட்சியத்தில் பற்றுள்ளவர்களின் துணை, ஒழுக்கமான வாழ்க்கை எல்லாம் அவருக்கு இருந்தது. அதனால்தான் பல்வேறு வகையான சிந்தனை, நடைமுறைகளைக் கொண்டவர்களை ஒருங்கிணைத்துச் சிறையிலிருந்து இவ்வளவு பேரைத் தப்ப வைக்க முடிந்தது என்பதைக் கணித்திருந்ததால் தான் தனியாக இயங்குமாறு பரமதேவாவுக்குக் கூறியிருந்தார்.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில் பரமதேவா செயல்பட்ட விதம் குறித்து அறிந்ததும் அவரது நம்பிக்கை மேலும் வலுத்தது. கிழக்கில் நடந்த முதல் சமரிலேயே பரமதேவாவை இழந்ததால்தான் போராட்டம் பல சிக்கல்களைச் சந்தித்தது. கருணாவுக்காக பிரபாகரன் பல்வேறு விட்டுக்கொடுப்புகளைச் செய்திருந்தாலும், அவரது ஆற்றல்களை உணர்ந்திருந்தாலும் பரமதேவாவின் நிலையில் வைத்து அவரைப் பார்க்க வில்லை என்பதே நிஜம்.

"உண்மை காலில் செருப்பை மாட்டிக் கொள்ள முன்னர் பொய் உலகமெல்லாம் சுற்றி விட்டு வந்துவிடும்" என்பதற்கு மட்டு. சிறை உடைப்பு நல்ல உதாரணம் .

(நாளையும் வரும்)

உலகச் செய்திகள்

# ஹொங்கொங்கின் தன்னாட்சி சுதந்திரம் முடிவுக்கு வருகிறது
## வெடிக்கிறது மக்கள் போராட்டம்



ஹொங்கொங், ஜூன் 22

ஹொங்கொங்கில் தேசிய பாதுகாப்பு அமைப்பை சீனா நிறுவவுள்ளது. இதன் மூலம் அந்தப் பகுதிக்கு வழங்கப்பட்ட தன்னாட்சி அதிகாரம் முடிவுக்குக் கொண்டுவரப்படவுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹொங்கொங் சீனாவின் நேரடிக் கட்டுப்பாட்டு பிரதேசமாகும். ஆனாலும், இது தன்னாட்சி பெற்ற பகுதியாக இருந்து வந்தது. இந்நிலையில் அந்தப் பகுதியின் மீது சீனா பல கட்டுப்பாடுகளை அண்மைக்காலமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

சீனாவின் இந்த நடவடிக்கைக்கு ஜனநாயக ஆதரவாளர்கள் எதிர்ப்புக்கள் - போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், சீன அரசுக்கு எதிராகப் போராடுபவர்களை இலக்கு வைத்து, பிரிவினைவாதிகள் மற்றும் தேச விரோத செயல்களைத் தடுக்க வென ஒரு சட்டத்தை சீன நாடாளுமன்றம் நடைமுறைப்படுத்தியது. இதன் மூலம் ஹொங்கொங் அரசின் அனுமதியின்றி பாதுகாப்பு விடயங்களில் தலையிடும் வாய்ப்பைப் பெற்றது.

இதனால், தமது சுதந்திர சுயாட்சிக்கு முடிவு கட்டப்படும் என்று கருதும் ஜனநாயக ஆர்வலர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவர்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளை சீனா இப்போது மேற்கொண்டு வருகின்றது.




எதியோப்பிய சூரி பழங்குடியினப் பெண் தனது மகனுடன், விந்தையான மலர் அலங்காரத்துடனும் முகத்தில் வண்ணப் பூச்சுடனும் உள்ளார்.

ஓமோ பள்ளத்தாக்கில் வாழும் இவர்களின் உயிர்வாழ்வு சிக்கலுடையதாகி விட்டது. நிலத்துக்கான போரில் இவர்கள் கொல்லப்படுகின்றனர்.

இங்கு சுமார் 2 இலட்சம் பழங்குடிகள் வாழ்கின்றனர். அயல் பழங்குடி இனங்களுடனான போரால் ஏ.கே. 47 துப்பாக்கிகளை இவர்கள் வைத்துள்ளனர். இந்த மோதல்களில் அதிகாரிகள் தலையிடுவதில்லை. தங்கள் கணக்கைத் தாமே தீர்த்துக் கொள்கின்றனர் இந்தப் பழங்குடிகள்.

# புதிய காதலனுடன் முன்னாள் காதலி ஆத்திரத்தில் வெட்டிக் கொன்ற பிக்கு



பாங்கொங், ஜூன் 22

தனது முன்னாள் காதலியைப் புதிய காதலனுடன் கண்ட பிக்கு ஒருவர் அவரை கண்டதுண்டமாக வெட்டிக் கொலை செய்தார்.

தாய்லாந்தை சேர்ந்த பிக்குவான உம் தீரென்ராம் (வயது - 57) துறவறத்துக்கு முன் லம்பாய் புவலோய (வயது - 33) என்ற பெண்ணை காதலித்து வந்தார். பிக்குவானதும் காதலியைப் பிரிந்து விட்டார்.

இந்த நிலையில், லம்பாய் புவலோய தனது புதுக்காதலனுடன் தனது வீட்டுக்கு முன் காரில் இருப்பதை தீரென்ராம் கண்டுள்ளார். கோபத்தில் தனது வாகனத்தால் அவர்களின் காரில் மோதினார்.

புதிய காதலன் அங்கிருந்து தப்பிவிட, கத்தியால் தனது முன்னாள் காதலியை வெட்டிக் கொன்றார். தனது காதலியை வேறொருவருடன் பார்த்ததால் ஏற்பட்ட கோபத்தில் அவரைக் கொன்று விட்டார் என்று கூறியுள்ளார்.

இதேவேளை, தீரென்ராமின் சகோதரர், தனது சகோதரர் பிக்குவாகும் முன்னர் லம்பாயை காதலித்தார் என்றும், அதன் அவரைப் பிரிந்து விட்டபோதும், தனது கர்ப்பத்துக்கு தீரென்ராமே காரணம், அதைக்கூறினால் அவர் துறவு பூணமுடியாது என்று கூறி லம்பாய் அவரை மிரட்டி வந்தார் என்று கூறியுள்ளார்.

மரணிக்கும்போது லம்பாய் எட்டு மாத கர்ப்பவதி என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க படைக்கு பெண் ஆலோசகர்



அமெரிக்க இராணுவத்தில், முதன் முறையாக, ஒரு படைப் பிரிவின் தலைமை ஆலோசகர் பொறுப்பில் பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க விமானப்படையில், அடுத்தடுத்து இரு சாதனை நியமனங்கள் நடைபெற்றுள்ளன. இரு வாரங்களுக்கு முன், விமானப்படை பணியாளர்களுக்கான, அடுத்த தலைமை அதிகாரியாக, ஆபிரிக்க அமெரிக்கரான ஜெனரல் சார்ள்ஸ் கே.பிரவுன் நியமனத்தை அமெரிக்க 'செனட்' சபை உறுதிப்படுத்தியது. அமெரிக்க இராணுவத்தில், ஒரு பிரிவின் தலைமை அதிகாரியாக, ஆபிரிக்க அமெரிக்கர் ஒருவர் நியமிக்கப்படுவது, இதுவே முதன் முறை.

இதேபோல, அமெரிக்க இராணுவத்தில், ஒரு பிரிவின் தலைமை அதிகாரியாக, பெண்கள் பணியாற்றிய வரலாறு இல்லை. இந்நிலையில், அந்நாட்டு விமானப்படையின், முதல் பெண் தலைமை ஆலோசகராக, ஜோஆனி எஸ்.பாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ஹவாய் தீவுகளில் உள்ள, மிலிலானி நகரை சேர்ந்த இவர், 1993ல் விமானப்படையில் சேர்ந்தார். மிசிசிப்பியில் உள்ள, கீஸ்லர் விமானப்படை தளத்தின் ஒரு பிரிவிற்கு, தலைமை மாஸ்டர் சார்ஜெண்டாக, தற்போது பணியாற்றி வருகிறார்.

# பிரிட்டனில் கத்திக்குத்து மூவர் பலி அறுவர் காயம்




தாக்குதல் இடம்பெற்ற ரெடிங் நகர் போர்புரி பூங்கா வளாகத்தில் விசாரணை நடத்தும் பொலிஸார்... படம் - பி.பி.ஸி. செய்திகள்

லண்டன், ஜூன் 22

பிரிட்டனில் இடம்பெற்ற கத்திக் குத்துத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர். ஆறு பேர் காயமடைந்தனர். இவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தென்புற நகரான ரெடிங்கின் போர்பரி பூங்காவில் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த தாக்குதலை 25 வயது இளைஞர் ஒருவரே நடத்தினார் என்று கூறப்படுகிறது. சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட அந்த இளைஞர் லிபிய நாட்டவர் என்று பி.பி.ஸி. இணையத்தளம் குறிப்பிடுகின்றது.

இந்த சம்பவம், பயங்கரவாத தாக்குதல் அல்ல என்று கருதுவதாகவும், எனினும் இதுகுறித்து தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று உள்ளகப் புலனாய்வு தலைமை கண்காணிப்பாளர் இயன் ஹண்டர் கூறினார்.

மேலும், இது போன்ற தாக்குதல் ஆபத்து எதுவும் இல்லை என்றபோதிலும் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று ரெடிங் நகர பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# யோகா தினத்தில் உறைபனியில் பயிற்சி



புதுடில்லி, ஜூன் 22

சர்வதேச யோகா தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலால் பொதுமக்கள் வீட்டிற்குள்ளேயே இருந்து யோகா செய்தனர்.

இந்நிலையில் லடாக் பிரதேசத்தின் திபெத்தில் 18 ஆயிரம் அடி உயரத்தில் உறை பனியில் இந்திய இராணுவத்தினர் யோகா பயிற்சியில் ஈடுபட்டனர்.

இதேபோல் சர்ச்சைக்குரிய இந்தியா - சீனா எல்லையில் 14 ஆயிரம் அடி உயரத்திலும் இராணுவத்தினர் யோகா பயிற்சி செய்தனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.06.2020 அன்று வெளியிடப்பட்டது.